NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2011

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 80 marks

---

## PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 8 pages. Please check that your paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2011

## பகுதி ஒன்று

1. **கீழ்வரும் பகுதியை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை அளிக்கவும்.**

### வெற்றி தோல்வி

வெற்றிக்குத் தோல்வியே அடிப்படையாகும் என்பதைப் படித்தவுடன், பலருக்கு அதிர்ச்சியாக இருக்கும். ஆனால் அதன் உண்மை தெரிந்தவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் கற்றுக் கொண்ட ஒரு முக்கிய பாடமாக அது இருக்கும். தோல்வி வெற்றிக்கு எதிர்ச்சொல் என்பது நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்று. பிறகு எப்படித் தோல்வி வெற்றிக்கு வழி வகுக்கும் என்று உங்கள் மனதில் வினா எழலாம். இக்கேள்விக்குப் பதிலை நீங்கள் நிச்சயம் இக்கட்டுரையின் மூலம் தெரிந்து கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்.

வாழ்வில் தோல்வியும் வெற்றியும் வருவது இயல்பு. எந்தச் செயலிலாவது தோல்வி கண்டுவிட்டால், "அடக்கடவுளே! நமக்கு வெற்றி கிட்டவில்லையே. நாம் தோல்வி அடைந்துவிட்டோமே, நமக்கு அதிர்ஷ்டமே இல்லையே" என்று மனதை வருத்திக் கொள்வதே பலரின் பழக்கமாகிவிட்டது. இதுவே அவர்கள் செய்யும் பெரும் தவறு. இதைத் தவிர்த்துத் தாம் தோல்வியடைந்ததற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அடுத்த முறை அதே தவற்றைச் செய்யாமல் வெற்றியை நோக்கி நடைபோடுபவனே புத்திசாலி. உதாரணத்திற்கு, ஒழுங்காகப் படிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டே இருக்கும் மாணவன் தேர்வுகளில் நன்றாகச் செய்யவில்லை என்று வைத்துக் கொள்வோம். அவன் தன் தவற்றை உணர்ந்து தான் படிப்பில் ஆர்வம் செலுத்தாததால்தான் நன்றாகத் தேர்ச்சி பெறவில்லை என்பதைப் புரிந்து கொண்டு படித்தால் அவன் வெற்றியடைவானா? அல்லது இந்தத் தேர்வில் தோல்வி கண்டதால் ஒருவேளை அடுத்த தேர்விலும் சிறப்பாகச் செய்யப்போவதில்லை என்று நினைத்தால் வெற்றி பெறுவானா?

தோல்வியின் காரணத்தை ஆராய்தல் மட்டும் போதாது. அதை நடைமுறையில் பின் பற்றவும் வேண்டும். அப்போது தான் பலன் கிடைக்கும். வெற்றிக்கு முயற்சியும் ஓர் அடிப்படை எனக்கூறலாம். முயற்சி செய்வோர் என்றும் இகழ்ச்சி அடைவதில்லை. சிலர் தோல்வியைக் கண்டவுடன் அதை விட்டு விலகிப்போக எண்ணுவர். இவர்கள் வெற்றியின் பாதையை மறைத்துக் கொண்டிருக்கும் பெரும் பாறையான தோல்வியை அங்கிருந்து அகற்றி அதற்குப் பின் உள்ள வெற்றி என்னும் அமிர்தத்தை அடைய முயற்சி செய்யவில்லை. ஒரு செயலில் ஈடுபட்டால், அதில் வெற்றி காணும் வரை முயற்சி செய்பவர்களே சாதனையாளர்கள். அதனால்தான் நம் முன்னோர்கள் 'முயற்சி திருவினையாக்கும்' என்று கூறியுள்ளனர்.

நம் எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்பவர் திரு. தாமஸ் ஆல்வா எடிசன் அவர்கள். அவர் மட்டும் தம் கடின உழைப்பினால் மின்சார விளக்கைக் கண்டுபிடித்திராவிட்டால், இன்றைய நிலை எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். அவர் நீண்ட நேரம் எரியும் ஒரு விளக்கை உருவாக்குவதற்கு ஆயிரத்துக்கும் மேலான பொருட்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்தார். ஆனால் ஒவ்வொரு முறையும் தோல்வி கண்ட பிறகும் அவர் வருத்தப்படவில்லை. தம்மால் எப்படியும் வெற்றியடைய முடியும், சாதனை படைக்க முடியும் என்று நம்பினார்; கடினமாக முயன்றார்; இறுதியில் வெற்றி பெற்றார்.

ஆகையால், தோல்வியைக் கண்டு அஞ்சாதீர்கள். ஆனால் வெற்றியடைய வேண்டும் என்று உங்களை நீங்களே ஊக்கமூட்டிக் கொள்ளுங்கள், அதற்கு முடிந்தவரை முயற்சி செய்யுங்கள். நீங்கள் நிச்சயம் வெற்றியின் சிகரத்தை அடைவீர்கள்.

IEB Copyright © 2011

1.1 **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக.**

1.1.1 வெற்றிக்கு ______________ அடிப்படையாகும். (1)

1.1.2 வாழ்வில் தோல்வியும் ______________ வருவது இயல்பு. (1)

1.1.3 ______________ காரணத்தை ஆராய்தல் மட்டும் போதாது. (1)

1.1.4 இன்றைய ______________ எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். (1)

1.1.5 ஆகையால், தோல்வியைக் கண்டு ______________. (1)

1.2 **சரியான விடை எழுதுக.**

1.2.1 எது பலருக்கும் அதிர்ச்சியாக இருக்கும்? (2)

1.2.2 எது உங்கள் மனதில் வினா எழலாம்? (2)

1.2.3 யார் புத்திசாலி என்று சொல்லலாம்? (2)

1.2.4 யார் சாதனையாளர்கள்? (2)

1.2.5 நாம் எதை ஊக்கமூட்டிக் கொள்ள வேண்டும்? (2)

1.3 **உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக.**

1.3.1 வாழ்வில் தோல்வியும் வெற்றியும் வருவது இயல்பு. (1)

1.3.2 ஒழுங்காகப் படிக்காமல் ஊர் சுற்றிக் கொண்டே இருப்பவன் நல்ல மாணவன். (1)

1.3.3 தோவியின் காரணத்தை ஆராய்தல் போதும். (1)

IEB Copyright © 2011 

1.4 **சரியாக எழுதுக.**

**உம்: ற்பெர்றோகள் = பெற்றோர்கள்**

1.4.1 கள்கண் (1)

1.4.2 வாவில்ழ் (1)

1.4.3 தம்வாபிடி (1)

1.4.4 துவய (1)

1.5 **ஒருமைக்குப் பன்மை எழுதுக.**

**உம். பெற்றோர் = பெற்றோர்கள்**

1.5.1 கண் (1)

1.5.2 வகுப்பு அறை (1)

1.5.3 மாணவர் (1)

1.5.4 குணம் (1)

1.6 **எதிர்ச்சொல் தருக.**

**உம். அங்கே = இங்கே**

1.6.1 அவர்கள் (1)

1.6.2 உண்டு (1)

1.6.3 பெரிது (1)

1.6.4 தோல்வி (1)

**30 marks**

IEB Copyright © 2011

## பகுதி இரண்டு

2. கீழ்வரும் பகுதியைச் சுருக்கி எழுதுக

Reduce the passage to about $\frac{1}{3}$ its size.

நாம் பள்ளியில் படித்து அறிவைப் பெறுகிறோம். அது வெறும் புத்தக அறிவு. அந்த அறிவோடு பொது அறிவையும் நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். பொது அறிவு பல இடங்களை நேரில் காண்பதாலும் பல மக்களோடு பழகுவதாலும் வளரும். அவ்வாறு வளர்ப்பதற்குரிய வழிகளுள் ஒன்று கல்விப் பயணம் ஆகும். இக்கல்விப் பயணத்தினால் நாம் அறிவைப் பெருக்கிக்கொள்வதோடு நம் உள்ளச்சோர்வை நீக்கிப் புத்துணர்ச்சியைப் பெறுகிறோம்.

எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் கல்விப் பயணம் ஒன்றை ஏற்பாடு செய்தார். அக்கல்விப் பயணத்தில் நான் கலந்துகொண்டேன். அக்கல்விப் பயணம் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

சென்னையிலிருந்து எங்கள் கல்விப் பயணம் தொடங்கியது. சென்னைப் புகைவண்டி நிலையத்தில் நீலகிரி விரைவு வண்டியில் ஏறினோம். அரக்கோணம், சேலம், கோவை வழியாக மேட்டுப்பாளையம் சென்றோம். அங்கிருந்து உதகமண்டலம் எனப்படும் உதகை நோக்கிப் புகைவண்டியில் புறப்பட்டோம். அவ்வண்டி மிகவும் மெதுவாகச் சென்றது. இடைவழியே மலையைக் குடைந்து செய்யப்பட்ட பல குகை வழிகள் உள்ளன. குகைவழிக்குள் ஒரே இருள்; வெளியில் வந்தவுடன் வெளிச்சம்.

**10 marks**

## பகுதி மூன்று

3. கீழ்வரும் பகுதியும் படமும் அடிப்படையில் வரும் கேள்விகளுக்கு விடை அளிக்கவும்.

### தமிழிலக்கியச் சான்றுகள்

பாரதி தமிழ் மன்றம் விடுத்த அழைப்பை ஏற்று ஈப்போவிலிருந்து பூரணி, முத்தமிழ் விழாவிற்கு வருகை தந்திருந்தார். கோலாலம்பூர் தேசிய மொழி வளர்ப்பு நிறுவன மண்டபத்தில் மூன்று நாட்களாகத் தொடர்ந்து விழா நடைபெற்றது. முதல் நாள் கலைப்போட்டிகளும் மூன்றும் நாள் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. மூன்றும் நாள் நடைபெற்ற விழாவில் பூரணி சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.




"பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! விழா ஏற்பாட்டுக்குழு பொறுப்பாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! சகோதரர்களே! சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதி தமிழ் மன்ற ஏற்பாட்டில் நடைபெறுகின்ற இந்த முத்தமிழ்விழா தொடர்ந்து ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற வேண்டுமென நான் பெரிதும் விரும்புகின்றேன்" என்று கூறி அவர் சொற்பொழிவாற்றத் தொடங்கினர்.

3.1 விடை அளிக்கவும்:

3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச் சொற்கள் எழுதுக. (4)

3.1.3 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு வினைச்சொற்கள் எழுதுக. (2)

IEB Copyright © 2011

3.2 சேர்த்து எழுதுக:

3.2.1 தமிழ் + பெண் (1)

3.2.2 அந்த + பெண் (1)

3.2.3 இந்த + செடி (1)

3.2.4 அதை + கண்டான் (1)

3.3 பிரித்து எழுதுக:

3.3.1 அவனைப் பார் (1)

3.3.2 இதைப் படி (1)

3.3.3 இரண்டாயிரம் (1)

3.3.4 பெரியப் பெட்டி (1)

3.4 ஆண்பாலுக்குப் பெண்பால் தருக:

3.4.1 தந்தை (1)

3.4.2 தாத்தா (1)

3.4.3 மகன் (1)

3.4.4 செல்வன் (1)

3.4.5 சிறுவன் (1)

3.5 கீழ்வரும் நான்கு சொற்களில் எச்சொல் பொருத்தமானதல்ல?

3.5.1 வீடு பள்ளி நூல் கடை (2)

3.5.2 நாய் கிளி யானை குதிரை (2)

3.5.3 பத்து ஆறு இருபது முப்பது (2)

3.5.4 ஆடு மாடு காடு மான் (2)

3.5.5 பா வா பை மா (2)

**30 marks**

பகுதி நான்கு

4. **கீழ்வரும் வாக்கியங்களைச் சரியாக எழுதுக.**

**உம்: கடைக்குப் போனேன் நேற்று நான். = நான் நேற்று கடைக்குப் போனேன்.**

4.1 வேகமாக ஓடும் பறவை இந்த. (2)

4.2 வீட்டு நாய், பூனை, பசு விலங்குகள். (2)

4.3 இது அப்பா எழுதிய நம் கடிதம். (2)

4.4 என்ன அதற்குக் கீழே எழுத வேண்டும் அக்காள்? (2)

4.5 அரசர் இருந்தார் முன்னொரு காலத்தில் ஒருவர். (2)

**10 marks**

மொத்த மதிப்பெண்கள் [80]

**Total: 80 marks**

IEB Copyright © 2011